"The Lord has anointed me.........to set free the oppressed" Lk.4:18
ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வு வழங்கவும்....
ஆண்டவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார்.."லூக்.4:18








# SILVER JUBILEE MASS

## THE SACERDOTAL ORDINATION OF REV.FR.J.AROKIANATHAN

## 10.5.2013 5.30 PM @ ST.PETER'S CHURCH, RUSTAMBAGH, BANGALORE

## அருள்தந்தை ஜெ.ஆரோக்கியநாதன் அடிகளார்

## குருவாக திருநிலைப்படுத்தப்பட்டதன் 25 ஆண்டுகள் நிறைவாக

## குருத்துவ வெள்ளி விழா திருப்பலி பாடல்கள்

# *வெள்ளிவிழா திருப்பலிப்பாடல்கள் Mass Hymns*

## வருகையில் Entrance



**அழைக்கப்பட்டோம் அன்பை விதைக்க**
**அன்பர் இயேசுவின் அழைப்பை ஏற்போம்**
**அவனியில் அமைதி என்றும் நிலைக்க**
**அனைவரும் அழியா காவியம் படைப்போம்**

**Azhaikkappattom Anbai vidhaikka**
**Anbar Yesuvin azhaippai yerpom**
**Avaniyil Amaidhi endrum nilaikka**
**Anaivarum azhiyaa kaaviyam padaippom**

காற்றும் கடலும் கம்மை காக்கும்
அதுபோல நாமும் பிறரை காப்போம்

**பண்-பாடல்: தந்தை ஜெ.ஆரோக்கியநாதன்**
**Lyric & music: Fr.J.Arokianathan**

வாசம் தந்திடும் மலர்களைப் போல
நம்மையே அன்பில் தந்திடுவோம்
சுயநலம் அகந்தை இனி இல்லை
பிறர்நலமே நம்வாழ்வின் புது எல்லை

சாதி சமய வேற்றுமை வேண்டாம்
மனிதம் தழைக்க விழைந்திடுவோம்
தேவனின் பிள்ளைகள் நாம் என்போம்
தேடக் கிடைய வரம் பெறுவோம்
சுயநலம் அகந்தை இனி இல்லை
பிறர்நலமே நம்வாழ்வின் புது எல்லை



## தியானிக்கையில்: Meditation யேவான் Jn 1:1

பாதைக்கு ஒளியே வருக எம் காலடிக்கு விளக்கே வருக
மங்கா புகழ் மருவிலா நித்திய மறைநூலே வருக
ஈடிலா உண்மையின் ஊற்றே தேடியும் கண்டிலா சுனையே வருக
நிர்மல வாக்கே நிரந்தர இன்பத்தைத் தருக

**சொல் சொல் சொல் ஒரே சொல் இறைச்சொல்**
**அந்தச் சொல்லால் அகிலமும் உண்டானது**
**அதுவே வேர்ச்சொல் மறைச்சொல்**
**அருள்சொல் ஆண்டவன் திருச்சொல்**

**Sol sol sol ore sol Iraichiol**
**Andha sollal aghilamum undaanadhu**
**Adhuve vaerchiol maraichiol**
**Arulsol Aandavan thiruchiol**

சரணம்: ஓம் என்றாலும் ஒரே சொல்
ஒருவரில் மூவர் என்றாலும் ஒரே சொல்-2
ஆதியில் இருந்ததும் அவர் சொல்
அந்தச் சொல்லாய் இருந்தவர் இறைச்சொல்-2
கடவுளாய் இருந்தவர் உயிர்ச்சொல்
அனைத்தையும் கடந்த **இயேசு என்னும் நிறைச்சொல்-2**

வேதங்கள் நிறைபல இருந்தாலும்
விவிலியம் ஒன்றே நமக்கு உண்மையன்றோ-2
தீய ஆவிகள் ஓடிடுமே
தீரா நோய்களும் தீர்ந்திடுமே-2
வானும் மண்ணும் ஒழிந்தாலும்
வாழ்வு தரும் இறை

வார்த்தை என்றும் ஒழிவதில்லை

வார்தைதை என்பது அவர்பெயர்
வல்லமை நிறைவாய் நமக்குத் தருபவர்-2
வழியும் உண்மையும் வாழ்வுமே
நானென்றார் நம் இயேசுவே-2
சொல்லிலும் பொருளிலும் அவர் மட்டுமே
சொல்லப்படாத உயிரென்றும் அவர்பதமே

**பண்: மலர்ச்செல்வன்**
Music : Malar Selvan
பாடல்: **தந்தை ஜெ.ஆரோக்கியநாதன்**
Lyric: Fr.J.Arokianathan



## தருகையில் Offertory

ஜீவ பலியாய் என்னையே உமக்குத் தருகின்றேன்
**இறைவா தயவுடன் ஏற்றருளும்-2**

**Jeeva Baliyaai ennaiye umakku tharughindren**
**Iraivaa dhayavudan Yetrarulum**

கோதுமை மணியாய் நானாக வேண்டும்
மண்ணில் விழுந்து மடிந்து பலன்தர வேண்டும்-2
திராட்சைப்பழமாய் நானாக வேண்டும்-2

அன்பு பொறுமை தியாகமெனும்,
நல்லபண்புகளோடு வாழ்ந்து
நல்ரசமாய் நான் மாறவேண்டும்

தூய்மை நிறைந்திடவேண்டுமே
எந்தன் சிந்தனை சொல் செயல் அனைத்துமே-2
உடல்பொருள் ஆவி அனைத்துமே
உமக்கு ஏற்றபலியாக
நான் மாறிட உமதருள் தாருமே

பண்-பாடல்: மலர்ச்செல்வன் Music & Lyric: Malar Selvan



## உண்கையில் Communion

**பல்: உணவாய் வருகின்றார் நம் இறைவன்**
**எவரும் அறியாத எவரும் புரியாத**
**மறைபொருளாய் வருகின்றார்**
**துதிப்போம் அவரை சுவைப்போம் -**
**Inavaai Varughindraar nam Iraivan-2**
**Evarum ariyaadha evarum puriyaadha**
**Maraiporulaai varughindraar**
**Thudhippom avarai suvaippom-**

**சர:** வேற்றுமை களைந்திடவே
நம்மில் வேற்றுமை களைந்திடவே
ஓர் அன்பின் சமூகம் படைத்திவே-2
மனித மாண்புகள் மலர்ந்திடவே-2
நம்மை விண்ணக விருந்திற்கு அழைக்கின்றார்-.

**சர:** மாண்புயர் அவருடலை
அவர்நினைவாய் உண்பதனால்
திருவுடன்படிக்கை நிறைவேறுமன்றோ-2
புனித வாழ்வின் மையமிது-2
இதை உண்போர் கிறிஸ்துவில் உயிர்பெறுவார்



## Here I am Lord - N 29 (Joyful Lips)

Here I am Lord, is it I Lord?
I have heard you calling in the night,
I will go Lord, if you lead me
I will hold your people in my heart

1. I, the Lord of sea and sky, I have heard my people cry
All who dwell in dark and sin, my hand will save
I who made the stars of night
I will make their darkness bright
Who will bear my light to them?
Whom shall I send?

2. I, the Lord of snow and rain, I have borne my people's pain
I have wept for love of them, they turn away
I will break their hearts of stone
Give them hearts for love alone
I will speak my word to them,
whom shall I send?

## நன்றி நவில்கையில் .......I love only Jesus இயேசுவை மட்டும்



பல்: **இயேசுவை மட்டும் நான் அன்புச் செய்வேன்**
**இயேசுவை மட்டும் நான் பின் செல்லுவேன்**
**இயேசுவில் மட்டும் நான்இளைப்பாறுவேன்**
**இயேசுவாய் மட்டும் நான் உருமாறுவேன்**

**Yesuvai mattum naan anbu seiven**
**Yesuvai mattum naan pin selluven**
**Yesuvil mattum naan ilaippaaruven**
**Yesuvaai mattum naan urumaaruven**

அ.ப: அவர் திருப்பெயர் என்றும் வாழ்கவே
அவர் திருச்சபையில் நாம் வாழவே

சர: 1. பனிபடரும் மலைபோல என்னுள்ளம் வாழுதே
பணியாத மனம்கொண்டு என் வாழ்வு அலைபாயுதே-2
நீதியில் நேர்மையில் நடக்கநான் விரும்பினேன்
நினையாத பொழுதில் நான் திசைமாறினேன்

சாவின் பிடியில் சிக்கினேன் என்னை
சிலுவையின் நிழலில் அழைத்தாரே
இயேசு என்னை அழைத்தாரே
இளைப்பாறிட மகிழ்ந்தாடிட
மனம் குளிர என்னை அணைத்தாரே
சர: 2. சிலைபோல உயிரின்றி
என் தசைகள் நடமாடுதே
சிலராலே நலமெல்லாம் எனைவிட்டு தினம்போகுதே-2
பார்ப்பவர் பார்வைக்காய் நன்மைசெய்ய விரும்பினேன்
புகழ்வேண்டி இறைவாழ்வை கறையாக்கினேன்

பாவப் பிடியில் சிக்கினேன் என்னை
பரிவுடன் தன்பக்கம் இழுத்தாரே
இயேசு என்னை இழுத்தாரே

ஒளியானவர் வழியானவர்
பிறர்வாழவே என்னை அழைக்கின்றார்

**பண்-பாடல்: தந்தை ஜெ.ஆரோக்கியநாதன் Music & Lyric: Fr.J.Arokianathan**



## அன்னையை புகழ்வோம் Marian Hymn

**பல்: மாதாவின் புகழ்பாடுவோம்**
**கன்னிமாதாவின் புகழ்பாடுவோம்**
**ஆயிரம் பெயர் சூட்டி பாயிரம் இசைமீட்டி**
**நாவாலே பண்பாடுவோம்**
**பொன் நாவாலே பண்பாடுவோம்**
**ஆவே மரியா-2 மரியே நீ வாழ்க -2**

**சர:** தஞ்சம்தேடி வருவோர்க்கெல்லாம்
இளைப்பாற வழி சொல்வாயே
தூயவனை ஈன்றெடுத்த தூயகத்தின் பெட்டகமே
எம் வாழ்வை உம் மகன்பால் ஈர்ப்பாயம்மா
பிறர்சேவையில் இனிவாழ்ந்திட
உன் வழியில் எந்நாளும் நடத்திடம்மா

**சர:** தன்னம்பிக்கை இல்வாழ்க்கையில்
இழந்தாலும் உடன்நிற்பாயே
சொன்னாலே போதாது உன் பார்வை ஒன்றாலே
நோயெல்லாம் குணமாக்கும் எங்கள் தாயே
அவர் சொற்படி செய்வீரென்று
உன்மகன் பதம் நாட அழைத்தாயம்மா

-------------------------

**பண்-பாடல்: தந்தை ஜெ.ஆரோக்கியநாதன் Music & Lyric: Fr.J.Arokianathan**

**I wish to thank all those who took part in the joy of my priestly silver Jubilee, May the Lord bless you abundantly**

**என் குருத்துவ வெள்ளிவிழா மகிழ்ச்சியில் பங்கேற்ற உங்களைவருக்கும் என் நன்றிகளும் இறையாசீரும்.**